1972 மார்ச் 17]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மொழிச் சிறுபான்மை யினருக்கு இரு மொழிப் பிரதேசமான திருத்தணியில் தெலுங்கு மொழி பயிலுவதற்கு வேண்டிய வசதிகள் செய்து தருவது அரசின் பொறுப்பு ஆகும். ஆனல் தெலுங்கு மொழி பயின்ற ஆசிரியர்கள் எல்லோருக்கும் வேலே தேடித் தருவது அரசின் சக்திக்கப்பாற்பட்டது.

திரு. இ. எஸ். தியாகராசன் : இன்னும் பல தெலுங்குபடித்த ஆசிரியர்கள் வேலே கிடைக்காமல் தவிக்கிருர்கள். அவர்களே எல்லாம் அப்பரென்டிஸ் என்கிற முறையில் வேலேக்கு நியமித்துக் கொள்ள ஆவன செய்வார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : திருத்தணியில் 17 உயர்நிலேப் பள்ளிகள் இருக்கின்றன. அவற்றைத் தவிர துவக்கப் பள்ளிகளும் இருக் கின்றன. அங்கெல்லாம் தெலுங்கு பயிற்சி பெற்றவர்களேயே தான் நியமிக் கின்ருர்கள். இன்னும் எங்கெங்கே வாய்ப்பு ஏற்படுகிறதோ அங்கெல்லாம் தெலுங்கு பயிற்சி பெற்றவர்களே நியமிக்கலாம்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, the Telugu Teachers have many real grievances and I have also represented them to the Hon. Minister for Education and he has also been kind and sympathetic in considering them. May I know from the Hon. Minister whether he will consider the appointment of a Special Officer to go into the needs and difficulties of these teachers and recommend to Government remedial measures?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அவர்களுடைய பிரச்சினே களேப்பற்றிய கோரிக்கைகளேக் கொடுத்திருக்கிருர்கள். அது அரசின் பரிசீலனே யில் இருக்கிறது. விரைவில் தக்கமுடிவு எடுக்கப்படும்.

Professors of Tamil

* 527 *Q.*—THIRU A. M. RAJA : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state whether Professors of Tamil have been appointed in all upgraded Government Colleges where the posts of Professors of English exist?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : எல்லாக் கல்லூரிகளிலும் தமிழ்த்துறையில் உதவிப் பேராசிரியர்கள் பணியாற்றுகிருர்கள். தமிழைப் பி. ஏ. வகுப்பில் சிறப்புப் பாடமாக பயிற்றுவிக்கும் கல்லூரிகளிலும், நான்கு உதவிப் பேராசிரியர்களுக்கு மேல் பணியாற்றும் கல்லூரிகளிலும் மட்டுமே பேராசிரியர்கள் நியமிக்க வேண்டுமென்பது பல்கலேக் கழகத்தின் விதிமுறை. இந்த விதி முறைக்குட்பட்ட எல்லா கல்லூரிகளிலும் தமிழ்ப் பேராசிரியர்கள்

[1972 மார்ச் 17

நியமிக்கப்பட்டுள்ளனர். ஆகையால், ஆங்கிலப் பேராசிரியர்கள் நியமிக்கப் படும் கல்லூரிகளில், தமிழ்ப் பேராசிரியர்கள் நியமிக்கப்படுகின்றனரா என்ற வினவுக்கு இடமில்லை.

திரு. ஏ. எம். இராஜா: தலைவர் அவர்களே, வருங்காலத்தில் நம் தமிழகத் தில் தமிழையே பயிற்சி மொழியாக ஆக்குவதற்கு அரசு வேகமாக எத்தனையோ திட்டங்களை மேற்கொண்டிருக்கிறது. ஆங்கில சுருக்கெழுத்தாளர்களைவிட தமிழ் சுருக்கெழுத்தாளர்களுக்கு ஸ்பெஷல் பே கொடுப்பது போல கல்லூரி களிலும் ஆங்கிலப் பேராசிரியர்களைவிட தமிழ்ப் பேராசிரியர்களுக்கு ஊதியத்தை உயர்த்திக் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தமிழ் பயிற்சி மொழியாக வந்தாலும் அந்த அந்தத்துறையைச் சேர்ந்தவர்கள்தான் தமிழிலும் வல்லமை பெற்று தமிழில் போதித்தாக வேண்டுமே தவிர, எல்லா பாடங்களையும் தமிழ்ப் பேராசிரியர்கள் போதிப்பது என்பது இயலாத காரியம். தமிழ்ப் பேராசிரியர்கள் தமிழ் மொழியைக் கற்றுக்கொடுக்கிறார்கள். பல்கலைக் கழகம் இதுபற்றி என்ன சிபார்சு அளிக்கிறதோ அதை இந்த அரசு பரிசீலிக்க எப்போதும் ஆயத்தமாக இருக்கிறது.

THIRU K. M. SUBRAMANIAM: Sir, may I know from the Hon. Minister whether there are two grades of Tamil Pandits in High Schools and if so, what is the difference between the two grades?

MR. DEPUTY SPEAKER: The main question relates to Colleges.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லை. என்றாலும் பத்தாவது பாஸ் செய்துவிட்டு, வித்வான் பரீட் சையும் பாஸ் செய்து ஆசிரியர் பயிற்சி பெற்றவர்கள் முதல் க்ரேடாகக் கருதப் படுகிறார்கள்.

ஐந்தாவது, ஆறாவது, ஏழாவது மட்டும் படித்துவிட்டு, வித்வான் பரீட்சை தேர்ச்சிபெற்று வருகிறவர்கள் 2-வது கிரேடாகக் கருதப்படுகிறார்கள். ஆயினும் இவர்களை ஒரு கால கட்டத்திற்குப் பிறகு முதல் நிலையாக எப்படி ஆக்கு வது என்பது பற்றி அரசு பரிசீலித்துக்கொண்டிருக்கிறது.